அசல்

1.6.42 கி.வா. ஜகந்நாதன்

அசல் - 1 நகல் -

உ
முருகன் துணை

திருப்பனந்தாள்

கலைமகள் காரியாலயம் ~~மயிலாப்பூர்~~,
போன்: 3003.
தபாற் பெட்டி: 604.

~~சென்னை~~, 1. 6. 1942.

அநேக நமஸ்காரம்.

உபய குசலோபரி.

நான் நேற்று எழுதிய தபால் கார்டு கிடைத்திருக்குமே.

நேற்றுப் பத்து மணிக்கு மேல் ஸ்ரீ ஸந்நிதியவர்களைக் கண்டு பேசியிருந்தோம். ஸ்ரீமத் ஐயாவர்கள் மறைவைக் குறித்து மிக்க வருத்தத்தோடு பேசினார்கள். "பத்திரிகைகளில் போதியபடி எழுதவில்லை. நான் இன்னும் அதிகமாக எதிர்பார்த்தேன்" என்று கூறினார்கள். "அவர்களைப் போன்ற மஹான்களைக் கனவிலும் காணமுடியாது" என்றார்கள். ஸமீபத்தில் வகுத்துக் கொண்டுவரும் பரீக்ஷைத் திட்டங்களின் மதிப்பை உணர்ந்து பாராட்டும் ஆற்றல் அவர்களுக்குத்தான் உண்டென்று சொல்லி வருந்தினார்கள்.

மேலும் சில பரீக்ஷைத் திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இசைத் தமிழ், சைவ சாஸ்திரம், அகப்பொருள், யாப்பிலக்கணம், அலங்கார நூல்கள் முதலியவை சம்பந்தமான பரீக்ஷைகள் அவை. அவற்றைப் பற்றிய செய்திகளைக் குறித்துப் பேசுவதற்கே என்னை வரும்படி கட்டளையிட்டார்களென்று தெரிந்தது.

திருக்கழுக்குன்றத்து ஆஸ்ரமவாசிகளைப் பற்றியும், தங்கள் மனநிலையைப் பற்றியும்

அசல்

1.6.42 கி.வா. ஜகந்நாதன்

அசல் – 1 நகல் –

வசாரத்தார்கள்" செய்ய வேண்டியவை
களை நாடகம் நடிப்பவரைப் போலச் செய்து
கொண்டிருக்கிறார்களேயன்றி, ஐயரவர்
கள் மரணத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி இன்
னும் நீங்கவில்லை" என்று சொன்னேன்.

பாசுத்திட்ட சம்பந்தமான சாஸனங்
களைப் பரிசீலனை செய்துகொண்டு வருகிறேன்.
அவர்களுடைய வியாக்கியானத்தைக் கேட்டு
அவற்றை விளக்கமாக வாசகத்திற் புலப்பட
அமைப்பதற்கு முயன்று வருகிறேன். நேற்று
ஒருபகுதியாயிற்று. இன்று எஞ்சிய பகுதி
ஆகலாம். அல்லது நாளைக்கும் வேலையிருந்தா
லும் இருக்கும். எப்படியேனும் நாளையன்று
நான் புறப்பட வேண்டும். வியாழக்கிழமை
ஊரையடைதலால் புதன்று மோகநாள் இருக்க
வேண்டும்.

ம.ஈ.ஈ.ஸ்ரீ வித்துவான் வி.மு.சுப்பிரமணிய
ஐயரவர்களும் இதனுடன் ஒரு கடிதம் எழுதி
வைத்திருக்கிறார்கள்.

எல்லோருக்கும் என் ஞாபகம் சொல்ல
வேண்டும்.

இங்ஙனம்,
அன்பன்
கி.வா.ஜகந்நாதன்

அசல்

1.6.42 கி.வா. ஜகந்நாதன்.

அசல் – 1 நகல் –



அசல்

1.6.42 தி.வா. ஜகந்நாதன்.

அசல் -1 நகல் -

